# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2464/31 - 2025 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2025.11.28

*2464/31 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.சீ.எவ். 1/64

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2025, நவெம்பர் 28.

**ஒழுங்குவிதிகள்**

சுருக்கப் பெயர்

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

***பொது***

பொருள்கோடல்

2. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-


1A - G 45826 — 354 (2025/11)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட அரச சட்டவாதியை, அரச சட்டவாதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சட்டத்தரணியை உள்ளடக்கும்;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி தொடர்பாக, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலொழிய அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்குப் பெயரினால் அல்லது பதவியினால் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது, (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதிகள் அல்லது வேறு எவையேனும் ஒழுங்குவிதிகள் என்று பொருள்படும்;

"அத்தியாவசிய சேவை" என்பது, பொதுப் பயன்பாட்டுக்கானதாகவுள்ள அல்லது தேசியப் பாதுகாப்புக்கு அல்லது பொது ஒழுங்கை பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகவுள்ள ஏதேனும் சேவை என்று பொருள்படுமென்பதுடன், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது அதன் கிளையையும் உள்ளடக்கும்;

"பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது, எவரேனும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்;

"காணி" என்பது, நீர் செறிந்துள்ள நிலத்தை வீடுகளின் அல்லது கட்டிடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும்;

"பொலிசு அலுவலர்" என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப் படையிலுள்ள உறுப்பினரொருவர் எனப் பொருள்படும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளையே உடையதாயிருத்தல் வேண்டும்;

"தேவைக்கெடுத்தல்" என்பது, ஏதேனும் வாகனத்தோடு தொடர்புபட்டு வரும்போது வாகனத்தை உடைமையில் எடுத்தல் அல்லது தேவைக்கெடுக்கும் அதிகாரியின் அகற்றுகையில் இடம்பெறவேண்டிய அவ்வாகனத்தைத் தேவைக்கெடுத்தல் என்று பொருள்படுவதோடு அதன் இலக்கண வேறுபாடுகளும் அல்லது கூட்டுமொழிகளும் அதற்கிணங்கப்பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பாதுகாப்பு அமைச்சுக்கான செயலாளர்" என்பது, பாதுகாப்பு அமைச்சுக்கான எவரேனும் மேலதிகச் செயலாளரையும் உள்ளடக்கும்;

"இலங்கை" என்பது, இலங்கையின் ஆள்புலமெனக் கொள்ளப்படுவதுடன், இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் வான் வெளியையும் உள்ளடக்கும்;

"ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது, அரசியலமைப்பிலுள்ளவாறான அதே பொருளை உடையதாய் இருத்தல் வேண்டும்; அத்துடன்

"கலன்" என்பது, ஒவ்வொரு விவரணத்தினவையுமான படகுகள், மிதவைகள், மரக்கலங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

(2) (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச்சட்டம், ஒரு சட்டத்தின் அல்லது கட்டளைச்சட்டத்தின் அல்லது தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் பொருள்கோடலுக்கு அது ஏற்புடையதாகின்றவாறு, ஓர் அவசரகால ஒழுங்குவிதியினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளினதும் அல்லது விதிகளினதும் பொருள்கோடலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஆவணத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி பற்றிய ஏதேனும் குறிப்பீடு, முரணான உட்கருத்து தென்பட்டாலொழிய, (40 ஆம்

அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறான அவ்வொழுங்குவிதிக்கான குறிப்பீடாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியானது, அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கப்படுவதனைத் தேவைப்படுத்துமிடத்தும் அல்லது இயலச்செய்யுமிடத்தும், அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய காலப்பகுதியெதனையும் குறித்துரைக்காதவிடத்தும், அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வொழுங்குவிதியின்கீழ் விடுக்கப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

அவசரகாலத் தத்துவங்கள், சனாதிபதியின் தத்துவங்களுக்கு மேலதிகமான வையாகவிருத்தல்

3. வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்குச் சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட வேறு எவையேனும் உரிமைகளுக்கு அல்லது தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

சனாதிபதியின் தத்துவங்களை எவரேனும் அமைச்சருக்குக் கையளித்தல்

4. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் சனாதிபதிக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, சனாதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அமைச்சரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தல்

5. (1) சனாதிபதி, இலங்கை முழுவதற்குமாக அல்லது எவரேனுமாள் எந்தக் கடிதத்தின்மூலம் நியமிக்கப்படுகின்றாரோ அந்தக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்காக அல்லது இடத்துக்காகப் பொதுவாக அல்லது விசேடமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படக்கூடிய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக அத்தகைய ஆளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாமென்பதுடன் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அந்நோக்கங்களுள் அத்தகையவற்றுக்கு வரையறுக்கவும்படலாம்:

ஆயின், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிற்கென அல்லது இடத்திற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதைத் தடைசெய்வதாகக் கருதப்படலாகாது.

(2) பெயர்குறிப்பிடப்பட்ட பதவியொன்றை வகிப்பவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்குமிடத்து, அப்போது, முரணாக வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அந்த நியமனம், அப்பெயர்குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய கடமைகளை அப்போதைக்குப் புரிகின்ற ஆளுக்கு நீடிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அறிவித்தல் களைச் சேர்ப்பித்தல்

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனும் ஆளுக்கு விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை அந்த ஆளுக்கு கையளிப்பதன்மூலம் அல்லது அவர் கடைசியாய் வசித்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்துக்கு அல்லது அவர் தொழிலிடத்திற்கு முகவரியிடப்பட்ட அஞ்சலில் அதனை அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

கட்டளை முதலான வற்றை இல்லா தொழித்தலும் வேறு படுத்தலும்

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவமும், அக்கட்டளையை அல்லது விதியை இல்லாதொழிப்பதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அதேமுறையிலும், நிபந்தனைகளெவையுமிருப்பின், அவற்றுக்கமையவும் பிரயோகிக்கப்படற்பாலதான ஒரு தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

**வளவுகளை உடமையாக்கி எடுத்தலும் மற்றும் வாகனங்களையும் ஆள்சார் சேவைகளைத் தேவைக்கெடுத்தலும்**

அவ் இடப் பரப்பிற்கான வளவுகளைத் தேவைக்கெடுத்தல்

8. (1) எவையேனும் கட்டிடம் அல்லது வளவுகள் ஏதேனும் இயற்கை அனர்த்தத்துடன் தொடர்புபட்ட வேலைக்கு அவசியமாகவுள்ளவிடத்து இலங்கைத் தரைப்படையில் படைப்பிரிவுத் தலைவர் அல்லது மேலாள், இலங்கைக் கடற்படையின் அவ் இடப்பரப்பிற்கான கடற்படைத் தலைவர் மற்றும் இலங்கை வான்படையின் இடரப்பரப்பின் பிரிவுக்கான ஏவுநர் அத்தகைய நோக்கத்திற்காக, அத்தகைய கட்டிடத்தை அல்லது வளவுகளை உடமைக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதில் காணப்படும் அல்லது அதில் சாதாரணமாக

வதிகின்ற ஆளெவரையும் வெளியகற்றி அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் எவரும் அத்தகைய வளவுக்குள் செல்லாதிருப்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும்;

ஆயின், அத்தகைய ஆதனத்துக்குச் சொந்தம் கோரும் ஆளெவரும் அத்தகைய ஆதனத்தை விடுவிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்குவதற்காக மேல் நீதிமன்றத்துக்கு அதற்கென விண்ணப்பமொன்றை செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றமானது அவரது அறிவுக்கெட்டாமல் அல்லது அவரது அறிவுறுத்தல்களுக்கு முரணாக அத்தகைய ஆதனம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதெனத் திருப்திப்படின் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டு இரண்டு வாரங்களைக் கொண்ட காலப்பகுதியொன்று முடிவடைந்ததன் மேல் அத்தகைய ஆதனத்தை விடுவிக்கவும் செய்யலாம்.

ஆயின், மேலும் மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறாக தவறொன்றைப் புரிந்தமைக்காக அத்தகைய ஆதனத்தை உடைமையிலெடுத்து ஆறு மாதங்களுக்குள் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படாவிடின் அத்தகைய ஆதனம் அதன் சட்டப்படியான சொந்தக்காரரிடம் மீளக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப் படுமிடத்தும் அத்துடன் அத்தகைய வளவுகள் அல்லது கட்டிடங்கள் இவ்வொழுங்குவிதியின் கீழான தவறொன்றை புரிகையில் அல்லது புரிவதுடன் தொடர்புபடுவதில் உபயோகிக்கப்பட்டிருந்ததென நீதிமன்றம் திருப்திப்படுமிடத்தும், அத்தகைய தவறுக்கு விதிக்கக்கூடியதான ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக அத்தகைய ஆதனம் குடியரசுக்கு இழப்பிக்கப்படவேண்டுமென கட்டளை ஆக்குதல் வேண்டும்.

வாகனங்களைத் தேவைக்கெடுத்தல்

9. (1) தகுதிவாய்ந்த அதிகாரி தேசிய பாதுகாப்பு நலன்கள், பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பராமரிப்பதற்காக அவ்வாறு செய்தல் அவசியமானதும் தகுதியானதுமாகவுள்ளதென கருதினால் அவர் இலங்கையில் ஏதேனும் வாகனங்களை தேவைக்கெடுக்கலாமென்பதுடன் தேவைக்கெடுத்தலுடன் தொடர்புபடுவதில் அவசியமானதென அல்லது தகுதியானதென தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தோன்றுகின்றவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் வாகனத்தை தேவைக்கெடுக்கின்றவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, தேசிய பாதுகாப்பு நலன்கள், பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அவசியமான வழங்கல் மற்றும் சேவைகளைப் பராமரிப்பதில் அவர் தகுதியானதென நினைக்கின்றவாறான அத்தகைய நோக்கத்திற்கும் அத்தகைய முறையிலும் வாகனங்களை உபயோகிக்கலாம், கையாளலாம் அல்லது உபயோகிக்க அதிகாரமளிக்கலாம்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் தத்துவங்களை பயனுற பிரயோகிப்பதற்கு அவ்வாறு செய்தல் வேண்டுமென அபிப்பிராயப்படின் அவர் இலங்கை முழுவதும் தொடர்பாக அல்லது அதனது ஏதேனும் பாகம் தொடர்பாக, கட்டளையொன்று தொடர்புறுத்தும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் வளவுகளின் உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் கட்டளையில் விபரிக்கப்படக்கூடியதான ஏதேனும் அத்தகைய வாகனத்தை, இக்கட்டளை பயனுறும் வேளையில் கொண்டிருக்கும் ஆளெவரும் அந்த வளவுகளிலிருந்து வாகனத்தை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஆளால் அல்லது அதிகாரியினால் அங்கிருந்து அகற்றப்பட அனுமதிக்கப்படும் வரையில் அதனை அகற்றுதலோ, அல்லது அகற்றுவித்தலோ அல்லது அகற்ற அனுமதித்தலோ ஆகாது.

(4) ஆயுத படையின் அலுவலர் அல்லது அரசாங்கத்தின் அலுவலர் எவரேனும், அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டதன் மேல் இவ்வொழுங்கு விதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அவ்வாள் மீது அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரயோகத்தில் எவரேனும் ஆளுக்கு ஒத்தாசை அல்லது உதவியளித்தல் வேண்டும்.

ஆள்சார் சேவைகள் தேவைப்படுதல்

10. சனாதிபதி தேசிய பாதுகாப்பு அல்லது அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்புத் தொடர்பில் அல்லது ஒத்தாசையில் ஏதேனும் வேலையை செய்வதற்கு அல்லது ஏதேனும் ஆள்சார் சேவை ஆற்றுவதற்கு எவரேனும் ஆளை தேவைப்படுத்துவதற்கு ஆன முறையில் தத்துவங்களை அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரி அல்லது அலுவலர்களுக்கு தனது கைப்பட கட்டளை மூலம் தேவைப்படுத்தலாம் அல்லது கையளிக்கலாம். எவரேனும் ஆள் இவ்வொழுங்கு விதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் முரண்படும் அல்லது இணங்கியொழுகத் தவறுமிடத்து தவறொன்றுக்கு குற்றவாளியாவதுடன் அத்தகைய தவறுக்கு நீதிமன்றம் சுமத்துகின்ற வேறேதேனும் தண்டத்திற்கு மேலதிகமாக நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பிற்குமாளாதல் வேண்டும்.

11. (1) சனாதிபதி கட்டளை மூலம் இலங்கை முழுவதற்குமான அல்லது அதன் பகுதியேதேனுக்கும் அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கென எவரேனும் ஆளை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து கட்டளை மூலம் நியமிக்கலாம். அத்தியாவசிய சேவைகள் பராமரித்தல் தொடர்பிலான எல்லா நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதலும் ஒன்றிணைத்தலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும். ஆணையாளர் தலைமை யதிபதியின் நியமனம்

(2) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி புரிதலுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பிரதி ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படலாம்.

(3) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர் ஒருவருக்கு இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் உரித்தாக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழ் கடமைகளைப் புரியும் நோக்கத்திற்காக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின் கீழ் எவருக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வதிகாரி அல்லது அலுவலர் மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(5) அத்தியாவசிய ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு ஏதேனும் தத்துவங்கள் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ் அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு.

அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்பை உறுதிப்படுத்த அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம். அத்துடன் ஒவ்வொரு அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுதல் விடயத்திற்கேற்றவாறாக அதிகாரி, அலுவலர் அல்லது இணைப்பு அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

12. (1) ஏதேனும் அத்தியாவசிய சேவை பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காப்பதற்கும் சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கும் அவசியமாவதெனத் தோன்றினால் சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஏதேனும் சேவையை அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தலாம். அத்தியாவசிய சேவைகள்

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி சனாதிபதியால் ஓர் அத்தியாவசிய சேவையாக வெளிப் படுத்தப்பட்ட சேவையொன்று தொடர்பிலான ஏதேனும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் -

(அ) அத்தகைய கட்டளையின் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்த பின்னர் சட்டபூர்வமான காரணமின்றி அவரது வேலைத்தலத்திற்கு அல்லது தொழிலிடத்திற்கு அல்லது அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் காலத்துக்குக் காலம் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய வேறு இடத்திற்கு வருகைதர மறுக்கின்றவரும் அல்லது தவறுகின்றவரும் அல்லது சட்டபூர்வமான காரணமின்றி வேலை செய்யத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது வேலைக்கு வராதிருக்கின்றவரும் அத்தகைய சேவையில் அவரது தொழில்தருநரின் நியதி நிபந்தனைகளுக்கிணங்க வழமையான வேலை நாளில் முழுக்காலப்பகுதியும் அல்லது ஏதேனும் பாகத்தில் வேலை செய்யாது ஒதுங்கியிருக்கின்றவரும்;

(ஆ) அத்தகைய கட்டளையில் திகதியிலிருந்து ஒருநாள் கழிந்த பின்னர் அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையை சட்டபூர்வமான காரணமின்றி புரியத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவரும்; அல்லது

(இ) குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள ஆளொருவராக இருந்துகொண்டு அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஆளொருவரால் அவர் காலத்துக்குக்காலம்

பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையை சட்டபூர்வமான காரணமின்றி அத்தகைய வேலையைச் செய்வதற்கு அத்தகைய தொழில் தருநரால் அத்தகைய ஆளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது இடத்தில் அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் (அத்தகைய நேரம் அல்லது இடம் அல்லது காலப்பகுதி வழமையான வேலை நேரங்களுக்குள் இருப்பினுஞ்சரி வெளியிலிருப்பினுஞ் சரி, விடுமுறை நாட்களிலிருப்பினுஞ் சரி) செய்யத் தவறுகின்றவரும் அல்லது மறுக்கின்றவருமான ஆளெவரும், அவர் வேலை நிறுத்தமொன்றை அல்லது ஒழுங்குசெய்யப்பட்ட வேறு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்கையில் அவ்வாறு வேலைக்குச் செல்ல அல்லது வேலை செய்யத் தவறியுள்ளார் அல்லது மறுத்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும் -

(i) எல்லா நோக்கங்களுக்காகவும் வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அவரது தொழிலை ஆளுகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதி நிபந்தனைகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் அவரது தொழிலை உடனடியாக முடிவுறுத்தியுள்ளதாக அல்லது வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) மேலதிகமாக தவறொன்றுக்கு குற்றவாளியாதலும் வேண்டும் .

(3) ஏதேனும் சேவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் சனாதிபதியால் அத்தியாவசிய சேவையொன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து –

(அ) எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் –

(i) அச்சேவை மேற்கொள்ளப்படுவதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தடைசெய்கின்ற, தாமதப்படுத்துகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற;

(ii) அச்சேவையில் அல்லது அது மேற்கொள்ளப்படுவது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆட்கள் அவர்களது வேலைத் தலத்திற்கு வருகை தருவதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அதனைத் தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற;

(iii) அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்வது தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை அவரது வேலைத் தளத்திற்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறு தூண்டுகின்ற, செயலாற்றுகின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற;

(iv) ஓர் அரசாங்கத் திணைக்களமாக அல்லது அதன் கிளையாக இருந்துகொண்டு இச்சபைக்குப் பதிலாக அல்லது அதற்குச் சமாந்தரமான வேறு ஏதேனும் சேவையைத் தாபித்தலை அல்லது பேணுதலை நிர்ப்பந்திக்கின்ற, தூண்டுகின்ற, செயலாற்றுவிக்கின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற;

(v) அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்ளுதல் தொடர்பில் தொழிலுக்கமர்த் தப்பட்டுள்ள வேறு எவரேனும் ஆளை சரணடையுமாறு அல்லது அவரது தொழிலை விட்டுச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்ற, தூண்டுகின்ற, செயலாற்றுவிக்கின்ற அல்லது ஊக்கப்படுத்துகின்ற (அத்தகைய ஆள் அதன் விளைவாக அவ்வாறு சரணடைந்தாலுஞ்சரி சரணடையாவிட்டாலுஞ்சரி, அல்லது விட்டுச் சென்றாலுஞ்சரி விட்டுச் செல்லாவிட்டாலுஞ்சரி); அல்லது

(vi) வேறு எவரேனும் ஆள் அச்சேவையில் அல்லது அதனை மேற்கொள்ளுதல் தொடர்பில் தொழில் வழங்குவதனை அல்லது ஏற்றுக்கொள்வதனை தடைசெய்கின்ற;

(ஆ) இப்பந்தியில் (அ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயலொன்றைப் புரியுமாறு வேறு எவரேனும் ஆளை ஏதேனும் செயலினால் அல்லது ஏதேனும் உரையினால் அல்லது எழுத்தினால் தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற ஆளொருவரும்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாகத் தமது தொழிலை முடிவுறுத்தியவராக அல்லது வறிதாக்கியவராகக் கருதப்படும் ஒவ்வோராளும், அத்தகைய முடிவுறுத்துகையிலிருந்து அல்லது வறிதாக்குவதிலிருந்து மூன்று நாட்களினுள், அரசாங்கத்தினால் அல்லது

அரசாங்கத்தின் சார்பில் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் குடிமனையை வறிதாக்குதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குடிமனையை வறிதாக்கத் தவறுகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பந்தியில் "குடிமனை" என்பது, வதிவு நோக்கத்துக்காக இருப்பாட்சி கொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய கட்டிடம், அறை அல்லது வேறு இட வசதி எக்காணியில் அல்லது வளவுகளில் அமைந்துள்ளதோ அக்காணியையும் அல்லது வளவுகளையும் உள்ளடக்கும்.

(5) இவ்வொழுங்குவிதிக்கெதிரான ஏதேனும் தவறுக்காக எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அப்போது, அத்தகைய தவறுக்காக நீதிமன்றம் விதிக்க வேண்டிய வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக –

(அ) அவ்வாளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும், அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு குடியரசுக்கு இழப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதியின் வலுவுக்கு வருகின்ற திகதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் பராதீனம் அல்லது வேறு கையாளுகை, வெற்றானதாகவும், வறிதானதாகவும் இருந்துள்ளதாகவும் இருக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் சேவை, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தியாவசியமான சேவையெனச் சனாதிபதி அவர்களினால் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தியாவசியமானதென வெளிப்படுத்தப்படும் அத்தகைய ஏதேனும் சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது அச்சேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் அலுவலர், சேவையாளர், ஊழியர் அல்லது முகவர் என்போரின் சேவைகள், அவசியமானதெனக் கருதப்படும் இடங்களிலெல்லாம், பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது எவ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு உரிய விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கலந்தாலோசனையுடன் தேவைக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

குடியியற் பாதுகாப்பு ஆணையாளரை நியமித்தல்

13. சனாதிபதி அவர்கள், கட்டளைமூலம், இலங்கை முழுவதற்கும் குடியியற் பாதுகாப்பு ஆணையாளராகவிருப்பதற்கென எவரேனுமாளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம். குடியியற் பாதுகாப்பைப் பேணுதல் தொடர்பான எல்லாச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதும் ஒழுங்கிணைப்பதும் குடியியற் பாதுகாப்பு ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் குடியியற் பாதுகாப்பு ஆணையாளர் தமது கடமைகளைப் புரிவதில் அவருக்கு உதவி புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரிகள், பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கப்படலாம்.

(3) குடியியற் பாதுகாப்பு ஆணையாளர், எவரேனும் பிரதி ஆணையாளருக்கு, உதவி ஆணையாளருக்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது அவற்றின் கீழ் அத்தகைய ஆணையாளருக்கு அளிக்கப்படும் அல்லது சுமத்தப்படும் அல்லது குறித்தளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக, குடியியற் பாதுகாப்பு ஆணையாளர், ஏதேனும் தத்துவம் அவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரி அல்லது அலுவலருக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு அளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(5) குடியியற் பாதுகாப்பு ஆணையாளர்-

(அ) இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரிக்கும் அல்லது அலுவலருக்கும்; அல்லது

(ஆ) 48 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்படும் ஒழுங்கிணைப்பு அலுவலரொருவருக்கும்.

குடியியற் பாதுகாப்பைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் இணங்கியொழுகுதல் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

மதியுரைக் குழுக்கள்

14. பிரதேச செயலாளர் ஒவ்வொருவரும் தங்களது உரிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு பகிரங்க சேவையாளர்களும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆட்களும் அடங்கிய மதியுரைக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும். அந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் பகிரங்க ஒழுங்கைப் பேணிக்காத்தல் அத்தியாவசிய வழங்கல்களையும் சேவைகளையும் பேணுதல் என்பன பற்றி இயைபான அதிகாரிகளுக்கும் மதியுரை வழங்குதல் அத்தகைய குழுவொன்றினதும் கடமையாதல் வேண்டும்.

## பாகம் III

### *நுழைவதற்கான உரிமை முதலியன*

அதிகாரமளிக்கப்படாத நுழைவுத் தடுப்பு

15. (1) அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்காக முழுமையாக அல்லது பிரதானமாக வதியுறும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் அதிகாரமில்லாமல் நுழைவதனைத் தடுப்பதற்கான சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்பட்டால், அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளை ஒன்றின் மூலம் அக்கட்டளையிற் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய விலக்குகளுக்கமைய எந்தவோராளும் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அதிகாரி அல்லது ஆளின் உத்தரவின்றி அந்தப் பிரதேசத்துக்குள், இடத்திற்குள் அல்லது வளவுக்குள் நுழைய அல்லது இருக்கக்கூடாதெனப் பணிக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை மீறி எவரேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் இருப்பின் அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய வேறு நடவடிக்கைகளுள் எதற்கும் பங்கமின்றி, அவர் அந்த இடத்திலிருந்து எவரேனும் பொலிஸ் உத்தியோத்தரால் அல்லது இலங்கை கடற்படை உறுப்பினர் ஒருவரால் அல்லது இலங்கை வான்படை உறுப்பினர் ஒருவரால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில் அத்தியாவசிய சேவையோடு தொடர்பில் “தகுதிவாய்ந்த அதிகாரி” என்ற சொற்றொடர் அத்தேவையின் நோக்கங்களுக்காகச் சனாதிபதியினால் பெயர் கொண்டு அல்லது பதவிப் பெயர் கொண்டு நியமிக்கப்படும் எவரேனுமொருவர் என்று பொருள்படும்.

## பாகம் IV

### *தேடுதல் மற்றும் கைது*

தவறுகளுக்காக தேடுதலும் கைது செய்தலும்

16. (1) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ, 360இ என்னும் பிரிவுகள் மற்றும் 364, 365, 365அ மற்றும் 365ஆ அத்துடன் 427 தொடக்கம் 446 வரையிலான பிரிவுகளின் கீழான தவறொன்றைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதாக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் ஆள் ஒருவரை யாதேனும் பொலிசு உத்தியோகத்தர், இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான்படை என்பனவற்றிலுள்ள எவரேனுமுறுப்பினர் அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் செயலாற்றும்படி சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர், தேடுகை செய்யலாம், அத்தகைய தேடுகை செய்வதற்காகத் தடுத்து வைக்கலாம் அல்லது பிடியாணையில்லாமலே கைது செய்யலாம் மேலும் அக்குற்றம் புரிவதில் அல்லது அதன் தொடர்பாக உபயோகிக்கப்பட்ட எவ்விதமானதுமான ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள் அல்லது பதார்த்தத்தைத் தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம் அல்லது தடுத்து வைக்கலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் தரைப்படைகளின் உறுப்பினரொருவரால் கைது செய்யப்பட்ட ஆளெவரும் இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ் தேடுகையிடுதலை நடாத்தும் யாரேனுமொருவர் அவரது தேடுகையிடுதலின் நோக்கத்தோடு தொடர்புபட்ட அல்லது சம்பந்தமுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக தேடுகையிடப்படும் வளவில் அல்லது இடத்தில் அல்லது மரக்கலத்தில் அல்லது வாகனத்தில் உள்ள எவரையும் அல்லது தேடுகையிடப்படும் ஆளை கேள்விகள் கேட்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் பந்தி (3) இன் கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோர் ஆளும் அவர் விசாரிக்கப்படும் அந்தக் கருமம் தொடர்பாக அவருக்குத் தெரிந்துள்ள அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் கீழ் தேடுகையிடப்பட வேண்டிய ஏதேனும் வளவில், இடத்தில், வாகனத்தில் அல்லது மரக்கலத்தில் வசிப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர், தேடுகையிடுதலை நடாத்துபவர் கேட்டவுடன் அவரை அவற்றுள் நுழையவிடுத்து அவர் தேடுகையிடுவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்தல் வேண்டும்.

(6) இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஒரு தேடுகையிடுதலை நடாத்தும் எவரும், தேடுகையிடப்படவேண்டிய வளவு, இடம், வாகனம் அல்லது கலத்துள் நுழைவதற்காக ஏதேனும் உட்கதவை அல்லது வெளிக்கதவை அல்லது உள் யன்னலை அல்லது வெளி யன்னலை உடைக்கலாம்.

(7) பெண்ணொருத்தியைத் தேடுகையிடுதல் அவசியமென்று கண்டவிடத்து வேறொரு பெண்ணைக் கொண்டு அப்பெண்ணைத் தேடுகையிடுதல் வேண்டும்.

(8) கைது செய்யும் அலுவலர் (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட கைது செய்தல் பற்றி அதாவது கைது செய்யும் அலுவலர் பொலிசு அலுவலர் ஒருவரானால் கைது செய்தல் இடம்பெற்ற பிரிவின் பொலிசுக் கண்காணிப்பாளர்களுக்கும், கைது செய்யும் அலுவலர் ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவரானால் கைது செய்தல் இடம்பெற்ற பிரதேசத்துக்கான எவரேனும் கட்டளையிடும் அலுவலருக்கு அவ்வாறு கைது செய்த இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் அறிக்கையிடுவது அவரது கடமையாதல் வேண்டும்.

(9) ஏதேனும் ஆதனம் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் கைப்பற்றப்படும் அல்லது தடுத்து வைக்கப்படுமிடத்து, கைப்பற்றல் அல்லது தடுத்து வைப்பினை விளைவு கொடுக்கும் ஆளொருவர் எவ்வாளின் கட்டுக்காப்பிலிருந்து அத்தகைய ஆதனம் கைப்பற்றப்பட்டதோ அல்லது தடுத்துவைக்கப்பட்டதோ அவ்வாளுக்கு ஆதனம் தொடர்பில் பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

## பாகம் V

### *தவறுகள் மற்றும் தண்டனைகள்*

17. (1) (அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு அழிவை அல்லது கெடுதியை விளைவிக்கும் ஏதேனும் செயலை அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமானத்தை அல்லது பயன்பாட்டை அழிக்கக்கூடியவாறான அல்லது குறைக்கக்கூடியவாறான ஏதேனும் மாறுதல்களை அழிவாக்கும் ஏதேனும் செயலைச் செய்யும்; தவறுகள்

(ஆ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்க பொருள் அல்லது ஏதேனும் வெடிபொருள் அல்லது எரிபதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் விபரணத்திலான கருவியின் உதவியோடு வேறு யாரேனும் ஆளிற்குச் சாவை அல்லது காயத்தை விளைவிக்கும் அல்லது விளைவிக்க முயலும்;

(இ) எத்தன்மையினவான ஏதேனும் சூழ்நிலைகளின் கீழ் தண்டனைச் சட்டக்கோவையின் 354, 355, 356, 357, 358, 359, 360, 360அ, 360ஆ மற்றும் 360இ என்னும் பிரிவுகளின் கீழ் ஏதேனும் தவறைப் புரிகின்ற;

(ஈ) வெறுமையாக அல்லது பாதுகாப்பற்று விடப்பட்ட அல்லது கெடுதி விளைவிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஏதேனும் வளவுகளில் ஏதேனும் பொருட்களைத் திருடுகின்ற; அல்லது

(உ) தண்டனைச் சட்டக்கோவையின் 427 முதல் 446 வரையான ஏதேனும் பிரிவுகளின் கீழ் ஏதேனும் தவறைப் புரியும் அல்லது ஏதேனும் வளவுகளிலிருந்து ஏதேனும் பண்டங்களை அல்லது பொருட்களை சட்ட முறையற்ற அகற்றுகின்ற அல்லது அகற்ற முயற்சிக்கின்ற;

(ஊ) தண்டனைச் சட்டக்கோவையின் 364, 365, 365அ மற்றும் 365ஆ எனும் ஏதேனும் பிரிவுகளின் கீழ் தவறைப் புரிகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் வளவுகளிலிருந்து பண்டங்களை அல்லது பொருட்களை சட்டமுரணாக அகற்றுகின்ற அல்லது அகற்ற எத்தனிக்கின்ற; அல்லது

(எ) உட்பந்தி (இ) என்பதில் அல்லது உட்பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் பொருட்கள் அல்லது பண்டங்கள் உட்பந்தி (இ) என்பதன் கீழ் அத்தகைய பண்டங்கள் அல்லது பொருட்கள் தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கான காரணம் இருந்து கொண்டு அத்தகைய பொருட்களை அல்லது பண்டங்களை நேர்மையற்ற முறையில் பெற்றுக்கொள்ளும் அல்லது தன்னகத்து வைத்திருக்கும்,

ஆள் எவரும் தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது இவ்வொழுங்கு விதிகளில் எது எவ்வாறிருப்பினும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தூக்குத் தண்டனைக்கு அல்லது இருவகையிலொருவகை ஆயுட்கால மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஆதனத்தின் தற்பாதுகாப்புப் பற்றிய உரிமையுடன் தொடர்புடையதும், அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கையில் பிழைசெய்பவர் ஒருவருக்கு மரணத்தை அல்லது வேறு தீங்கை விளைவிக்க முடியுமான சூழ்நிலைகளை ஏற்படுத்துதல் தொடர்பில் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 96 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அப்பிரிவின் முடிவில் பின்வருவன சேர்த்துக்கொள்ளப்பட்டன என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும்:-

"ஐந்தாவதாக, அவசரகால (நானாவித ஏற்பாடுகள், தத்துவங்கள்) ஒழுங்குவிதியின் 15 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு"

(3) (அ) அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தவறு தொடர்பிலான குற்றப்பகர்வொன்று, அத்தகைய குற்றம் புரியப்படும் நேரத்தில் அல்லது குடியியல் கலகம் தொடர்பாக அல்லது அதன் நெறியின்போது தவறு புரியப்பட்டதென சட்டத்துறைத் தலைமையதிபதி திருப்திப்படுவாராயின் அவரால் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படலாம்.

ஆயினும், ஏதேனும் தவறு புரியப்படுதல் தொடர்பான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவரான அத்தகைய தவறுகள் தொடர்பில் அல்லது அத்தகைய வகுதியினவான தவறுகள் தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு சட்டத்தறைத் தலைமையதிபதி அதிகாரமளிக்கலாம். அதன்மீது அத்தகைய வழக்கு நடவடிக்கைகள், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் எழுத்திலான அதிகாரத்துடன் தொடரவும்படலாம். அத்துடன் அத்தகைய தவறுகள் தொடர்பான விளக்கம் தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XVII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) நீதிவான் நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளவிடத்து தவறானது, இந்த ஒழுங்குவிதிகளின் 29 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

விசுவாசக் குறைப்பைத் தடுத்தல்

18. எந்த ஆளும் -

(அ) (i) பகிரங்க அலுவலர்;

(ii) குடியரசின் சேவையில் ஈடுபட்டுள்ளனர்; அல்லது

(iii) அத்தியாவசிய சேவைகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளனர்

என்போர்க்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தவோ

(ஆ) பந்தி (அ) குறிப்பீடு செய்யப்பட்டுள்ள யாரேனுமொருவரை அத்தகையவர் பகிரங்க அலுவலர் என்ற முறையில் அல்லது மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய முரண்பாடொன்றை அமைத்துருவாக்கும் ஆளொருவர் என்ற முறையில் அவர் செய்யவேண்டிய கடமையினின்றும் தவறும் வண்ணம் எதனையும் செய்யும்படி அல்லது செய்யாது விடும்படி எத்தனிக்கவோ ஆகாது.

துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை விநியோகித்தல்

19. பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாகவிருக்கும் உள்ளீடுகளைக் கொண்டுள்ள எவையேனும் சுவரொட்டிகளை, கைத்துண்டுகளை அல்லது துண்டுப் பிரசுரங்களை ஆளெவரும் பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய ஏதேனுமிடத்தில் ஒட்டுதலோ அல்லது பொதுமக்களிடையே விநியோகித்தலோ ஆகாது.

வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல்

20. ஆள் எவரும் வாய்மொழி மூலமாகவோ அல்லது ஏதேனும் எழுத்துமூல, இலத்திரனியல், எண்ணிம முறைகள் அல்லது ஏதேனும் ஊடக, தகவல் மற்றும் தொடர்பாடற் தொழில்நுட்ப, தன்னியக்க முறைமை அல்லது செயற்கைத் தொழில்நுட்ப, தன்னியக்க முறைமை அல்லது செயற்கைத் தொழில்நுட்ப முறை உள்ளடங்கலான எத்தகையவுமான வேறெவையேனும் முறைகள் மூலமாவோ பொதுமக்களுக்கிடையில் பயத்தை ஏற்படுத்தும் அல்லது பொதுமக்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் சாத்தியமுடைய எவையேனும் வதந்திகளை அல்லது பொய்யான கூற்றுக்கள் எதனையும் தொடர்பாடவோ, வெளியிடவோ, தோற்றுவிக்கவோ அல்லது பரப்புதலோ ஆகாது.

21. எவரேனும் ஆள் – பொய்யான கூற்றுக்கள்

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை பின்பற்றி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு விடையளிக்கும் போது முக்கியமான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றெதனையும் கூறினால் அல்லது தகவலெதனையும் தெரிவித்தால்; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி கேட்கப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுதல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறேதேனும் ஆவணம் என்பவற்றில் மேற்சொன்னமாதிரியான கூற்றைக் கூறினால்,

தவறொன்றுக்கு அவர் குற்றவாளியாதல் வேண்டும்

22. எந்த ஆளும் எஞ்சின், எரிபொருள் தாங்கி வண்டி, சாமான் பெட்டி அல்லது வாகனம் என்பவற்றுக்கு அல்லது என்பனவற்றின் மேல் உள்ள அத்தகைய ஆளுக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஏதேனும் புகைவண்டிப் பாதையில் அல்லது பொதுத் தெருவில் நிற்கும் எவரேனும் ஆள், எஞ்சின், எரிபொருள் தாங்கி வண்டி, சாமான்பெட்டி அல்லது வாகனம் மேல் பொருளை அல்லது பதார்த்தத்தை எறிதல் கூடாது. இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளில் எதனையும் மீறும் ஆள் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கான கடுழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். எரிபொருட்கள் வீசுதல்

23.(1) ஏதேனும் பிரதேசத்தில் எந்தவோராலும் வேறு எவரேனும் ஓர் ஆள் உறையும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக் கிட்ட அல்லது இடத்திற்குக் கிட்ட அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள எவரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அத்தகைய ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டிலிருந்து வெளிக்கிளம்புவதை தடை செய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது. மிரட்டல் முதலிய வற்றை தடுத்தல்

(2) இவ்வொழுங்குவிதியின் “மிரட்டல்” என்ற சொல் ஓர் ஆளினது மனதில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள எவரேனும் உறுப்பினருக்கு அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்கு தீங்கு விளைந்து விடுமோ என்ற நியாயமான ஐயவச்சத்தை ஆக்குதல் அல்லது எவரேனும் ஒருவருக்கு அல்லது ஆதனத்துக்கு தீங்கு விளைத்து விடுமோ என்ற நியாயமான அச்சத்தை ஆக்குதல் வேண்டும் என்று பொருள்படும். “தீங்கு” என்ற சொல் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வருவாய்கள் தொடர்பான தீங்குகளை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய பிழைகளையும் உள்ளடக்கும்.

24. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஓராளிற்கு அளிக்கப்பட்ட அல்லது ஓராளின் மேற்சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவர் பிரயோகிப்பதை அல்லது புரிவதை எந்த ஆளும் எதிர்த்தலோ தடுத்தலோ ஆகாது. அதிகாரம் பெற்ற ஆட்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்

25. எவ்வோராளும் சட்டப்படியான அதிகாரமின்றி ஏதேனும் பொதுத் தெரு, பாலம் அல்லது மதகு அல்லது ஏதேனும் புகைவண்டிப் பாதை, அல்லது பொதுத் தெருப் போக்குவரத்து வாகனத்தைத் தடை செய்யலோ சேதப்படுத்தலோ ஆகாது. தெருக்கள், புகைவண்டிப் பாதை முதலிய வற்றை மறித்தலும் சேதப்படுத்துதலும்

26. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றை- தவறுகள் புரிய எத்தனித்தல்

(அ) செய்வதற்கான ஆயத்த முறையிலான ஏதேனும் செயலை புரிய எத்தனிக்கும் அல்லது செய்கின்ற;

(ஆ) புரிவதற்கு இன்னோராளுக்கு உதவியளிக்கும் அல்லது உடந்தையாயிருக்கும்; அல்லது

(இ) புரிவதற்கு இன்னோராளுடன் சூழ்ச்சி செய்யும், எவரேனுமாள் அத் தவறுக்கு தானும் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் அத்தகைய தவறுக்கு விதிக்கப்பட்டவாறான அதே முறையில் விளங்கப்படுதலும் அதே தண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

தவறுக்கு உதவுதல்

27. யாரேனுமொருவர் ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றிற்காகச் குற்றவளியாகின்றாராவென்பதை அல்லது நம்புவதற்கு நியாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும், அந்த யாரேனுமோராளுக்கு அந்தச் சொல்லப்பட்ட குற்றத்திற்காக அந்த ஆளைக் கைது செய்வதை அல்லது தண்டிப்பதை தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும், குழப்பும் எண்ணத்தோடு உதவியளிக்கக் கூடாது.

குழுவினரால் செய்யப்படும் குற்றங்கள்

28. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்று ஆட் குழுவொன்றினால் செய்யப்படு மிடத்து-

(அ) அந்தக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், அதன் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது கூட்டிணைக்கப்பட்டவரும்: அத்துடன்

(ஆ) அந்தக்குழுவானது குழுமமொன்றாகவிருப்பின் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்குடைமையாளரும் அத்தவறானது அவரது அறிவுக்குட்படாது புரியப்பட்டதாக எண்பித்தாலொழிய அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான முறையான எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்திருந்தாரென எண்பித்தாலொழிய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டங்கள்

29. (1) ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற்றுக்கு இணங்கத் தவறும் எந்தவோராளும் குற்றமொன்று புரிந்தவராகி அத்தகைய அவ் ஒழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய, யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னரான அல்லது நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டினை விஞ்சாததுமான ஒரு காலத்திற்குக் கடூழிய சிறைத் தண்டனையும் ஐந்நூறு ரூபாவுக்கு குறையாமலும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமும் விடுக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ்வொழுங்குவிதியின் தண்டனையெதுவும் விதித்துரைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குற்றத்தைப் புரியும் ஓர் ஆள் யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னராக, அல்லது நீதிவானொருவர் முன்னராக விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306(2) என்னும் பிரிவு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றத்திற்காக குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோர் ஆளுக்கும் ஏற்புடையதாகாது

தகவல் கொடுப் பதற்குரிய கடமை

30. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கானவோர் உட்கருத்து, எத்தனிப்பு அல்லது புரிவதற்கான ஆயத்தமுறை அல்லது செய்கை பற்றி அறியவரும் எவரும் அது பற்றிய தகவலை மிக அண்மையில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தருக்கு அல்லது மிக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் அறிவித்தல் வேண்டும்.

(2) பந்தி (1) இல் குறிப்பிடப்பட்ட தகவலை வேண்டுமென்று கொடுக்கத்தவறும் அல்லது மறுக்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) அவசரகால ஒழுங்குவிதியொன்றில் கீழான ஏதேனும் தவறொன்று தொடர்பிலான ஏதேனும் தகவலைப் பெறும் கிராம உத்தியோகத்தரெவரும், மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கு அத்தகைய தகவலை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

புலனாய்வுக்கான பொலிசு அலுவலர் களின் தத்துவம்

31. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்று பற்றி புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரெவரேனும் –

(அ) அத்தவறு பற்றி நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவரெனச் சந்தேகமான எவரேனுமாளை வாய்மொழி மூலம் பரீட்சிப்பு செய்யலாம். அத்துடன் அவ்வாறு பரீட்சிப்பு செய்யப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை எழுத்தில் பதிதல் வேண்டும்:

ஆயின் எப்படியாயிருப்பினும், அத்தகைய கூற்றொன்று அதனைச் செய்பவராலும் அதனைப் பதிவு செய்யும் பொலிசு அலுவலராலும் ஒப்பம் இடப்படுதல் வேண்டும் :

ஆயின் அத்தகைய ஏதேனும் கூற்றொன்றை ஒப்பமிட மறுக்கும் ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய மறுப்பானது பொலிசு அலுவலரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளின் மாதிரிக் கையெழுத்துக்கள், நிழற்படங்கள், விரலடையாளங்கள் மற்றும் வேறு அடையாளங்காட்டும் குறிகளைப் பெற்றுக்கொள்ளலாம்;

(இ) அத்தகைய ஆளைத் தேடுகையிடலாம் அல்லது அத்தகைய ஆள் வதியும் வீட்டினுள் அல்லது வேலைத் தளத்தினுள் நுழைந்து அவ்விடத்தைத் தேடலாம்.

(ஈ) அத்தகைய ஏதேனும் தவறுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்டதாகச் சந்தேகமான ஏதேனும் இடத்தினுள், கட்டிடத்தினுள், வாகனத்தினுள் அல்லது கலத்தினுள் நுழைந்து தேடலாம்; அத்துடன்

(உ) ஏதேனும் தந்திச் செய்தி, அஞ்சல் ஆவணம் அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள புத்தகம் அல்லது ஆவணம் உட்பட எவ்வகையினதான அசைவுள்ள ஆதனமெதனையும் சோதனையிட்டு உடைமையிலெடுக்கலாம்.

ஆயினும் எப்படியிருப்பினும் ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது அஞ்சலகத்திலிருந்து ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைப் பெறுவதற்கு நாடு முன்னர் விடயத்திற்கேற்ப அத்தகைய வங்கிக்கு அல்லது அஞ்சலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள முகாமையாளர் அல்லது அலுவலர்க்கு அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்றதென உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி வரிசைக்கு குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரொருவரினால் முன்னைய எழுத்திலான தகவலுடன் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

சந்தேகிக் கப்பட்ட ஆளின் உடமையிலுள்ள ஆவணங்கள்

32. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறொன்றுடனும் தொடர்புபட்டவரெனச் சந்தேகப்படும் எவரேனுமாளின் ஆளொருவரின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம் அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக எவையேனும் நடவடிக்கைகளில் இயைபானதாதல் வேண்டியதுடன் அத்தகைய புத்தகம், ஆவணம் அல்லது பத்திரத்தின் உள்ளீடுகள் அதற்கான எண்பிப்பு இன்றி அத்தகைய ஆளுக்கெதிராக சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

விசாரிப்பதற்குள்ள உரிமையும் உதவி செய்வதற்கான கடமையும்

33. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணான எது எவ்விதமிருப்பினும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை புலனாய்வு செய்யும் எவரேனும் பொலிசு அலுவலரொருவர் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர்-

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது கட்டுக்காப்பில் இருக்கும் ஆளொருவர் உட்பட எவரேனும் ஆளை விசாரணை செய்வதற்கான உரிமையையும் அத்துடன் அத்தகைய விசாரணைக் காலத்தின்போது அத்தகைய புலன் விசாரணை நோக்கமாக இடத்திற்கிடம் அத்தகைய ஆளை இட்டுச்செல்ல உரிமையும் கொண்டுள்ளார்; அத்துடன்

(ஆ) அத்தகைய புலனாய்வு நோக்கத்திற்காக அவசியமான ஆவணங்கள் உள்ளடங்களாக, விசாரணைக்கு உட்பட ஏதேனும் பொருள் அல்லது வேறு பண்டத்தையேனும் அவ்வாறு விசாரணைக்குட்படும் எவரேனும் ஆளிடமிருந்து பொறுப்பிலெடுப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றையிட்டுப் புலனாய்வு செய்யும் பொலிசு அலுவலருக்கு அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளுக்கு எல்லா உதவியும் செய்வது ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும் என்பதுடன் இவ்வொழுங்குவிதியின் (1) என்னும் பந்தியின் (அ) ஆம் உட்பந்தியின்கீழ் விசாரணை செய்யப்படும் ஒவ்வோராளும் அவருக்கு விடப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையாக மறுமொழியளித்தலும் வேண்டும் அத்துடன் வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய ஆள் எந்தத் தன்மையில் அத்தகைய தகவலைப் பெற்றார் அல்லது அத்தகைய ஆவணத்தின் உள்ளடக்கம் பற்றி அறிந்துகொண்டார் என்பதனைப் பொருட்படுத்தாமல் புலனாய்வின் விடயப் பொருளை மருவிய ஏதேனும் ஆதனத்தின் உள்ளடக்கம் உட்பட எல்லாத் தகவலையும் வெளியிடுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலருக்கு அல்லது உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு, ஒழுங்குவிதியின் (1) என்னும் பந்தியின்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோராளினதும் கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் உள்ள

ஆவணமொன்றுட்பட, ஏதேனும் பொருளை அல்லது வேறு பண்டங்களை ஒப்படைக்கும்படி அத்தகைய பொலிசு அலுவலரினால் அல்லது உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் பணிக்கப்படும்போது அவ்வாறு செய்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளுள், எவற்றினதும் மீறுகையொன்று அல்லது அதன்கீழ் சுமத்தப்படும் ஏதேனும் கடமையை மீறுதலானது, இவ்வொழுங்குவிதிகளின் 29 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தண்டிக்கப்பட்டற்பாலதான அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றாதல் வேண்டும்.

சென்று பார்ப்பதற்குப் பொலிசு அலுவலருக்குள்ள உரிமை

34. எவரேனும் ஆள் தடுப்புக்காவலில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் காலப்பகுதியின் போது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரொருவர், அத்தகைய புலனாய்வின் நோக்கத்திற்காக அத்தகைய எவரேனுமாளை நியாயமான மணித்தியாலங்களின்போது சென்று பார்ப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொலிசு அலுவலரின் தத்துவங்கள் ஏனைய தத்து வங்களுக்கு மேலதிகமானவையாக இருத்தல்

35. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்குள்ள தத்துவங்களுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டும்; அவற்றைக் குறைப்பனவாகவல்ல.

பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள் குறித்த சில வேறு அலுவலர்களினாலும் ஆட்களினாலும் பிரயோகிக்கப்படுதல்

36. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள், முறையே இலங்கைத் தரைப்படையின் ஏவுநரினால், இலங்கைக் கடற்படையின் ஏவுநரினால் அல்லது இலங்கை வான்படையின் ஏவுநரினால் அவ்வாறு செய்யும்படி அதிகாரமளிக்கப்படும் இலங்கைத் தரைப்படையின், இலங்கை கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் எவரேனும் ஆணைபெற்ற அல்லது ஆணைபெறாத அலுவலரினால் பிரயோகிக்கப்படலாம் .

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்குள்ள தத்துவங்கள், அதற்கெனச் சனாதிபதியவர்களினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாளினாலும் பிரயோகிக்கப்படலாம்.

நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கான முன்னுரிமை

37. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்படும் தவறொன்று தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகள், நீதிமன்றத்தின் வேறேதேனும் அலுவலலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.

விசாரணைகளும் விளக்கங்களும்

38. (1) இதன்கண் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிரவும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்படும் தவறொன்று தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகள், அவ்வாள் அப்போதைக்கு எந்தவிடத்தில் உள்ளாரோ அந்த இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள தோதான நீதிமன்றமொன்றின் முன்னர் எடுக்கப்படலாம்.

(2) (அ) அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆட்களினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்படும் தவறுகள்; அல்லது

(ஆ) அத்தகைய தவறுகளாகவமைகின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள், அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில் அல்லது புரிகையில் அல்லது பிரயோகிப்பதாக அல்லது புரிவதாகக் கருதி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்தவிடத்து, அல்லது அதிலிருந்து எழுந்தவிடத்து, அல்லது அதில் செய்யப்பட்டவிடத்து அல்லது செய்யாது விடப்பட்டவிடத்து, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஆட்களினாற் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட தவறுகள்.

எந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவேண்டுமென அல்லது விளங்கப்படவேண்டுமெனச் சட்டத்துறைத் தவைமையதிபதி முடிவு செய்யலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தவறுகள் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளினுள் புரியப்பட்டிருப்பின், அத்தகைய தவறுகளை விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருந்ததான ஒரு நீதிமன்றமாகவிருத்தல் வேண்டும்.

(3) குற்றச்சாட்டுகளுள் ஆகக்குறைந்தது ஒன்றாவது (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றுக்கானதாகவிருக்குமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குற்றப்பத்திரமொன்றை நேரடியாக

மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பலாமென்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர், அவ்வாறு முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரத்தின்மீது யூரர் சபையொன்றின்றி விளங்கப்படுதலும் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி, எந்த நீதிமன்றத்தினால் ஏதேனும் தவறு விசாரணை செய்யப்படவேண்டுமோ அல்லது விளங்கப்படவேண்டுமோ அந்த நீதிமன்றம் பற்றி முடிபு செய்யுமிடத்து, அவர், தமது எழுத்திலான ஆணை மூலம், அத்தகைய தவறு எந்த நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படவேண்டுமோ அல்லது விளங்கப்பட வேண்டுமோ அந்த நீதிமன்றமாக அத்தகைய நீதிமன்றத்தைப் பெயர் குறித்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய விசாரணை அல்லது விளக்கம் அத்தகைய ஆணையின் அதிகாரத்தின் மீது அத்தகைய நீதிமன்றத்தினால் நடாத்தப்படுதலும் வேண்டும்; அத்தகைய விசாரணையின் அல்லது விளக்கத்தின் வழக்கு நடவடிக்கைகளுடன் அது பதிவேட்டில் கோப்பிடப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியின் முடிவொன்று-

(அ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆட்களினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட எல்லாத் தவறுகளுக்கும்;அல்லது

(ஆ) இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்;அல்லது

(இ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்;அல்லது

(ஈ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களினால், அல்லது குறிப்பிட்ட எவரேனும் ஆளினால் புரியப்பட்டனவெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(உ) இலங்கை பூராகவும் அல்லது இலங்கையில் குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் குறிப்பிட்ட எவரேனும் ஆளினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட குறிப்பிட்ட ஏதேனும் தவறுக்கு.

ஏற்புடையப்படற்பாலதாக்கப்படலாம்

(6) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது, ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து வேறேதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது இடத்துக்கு ஏதேனும் குற்றவியல் தவறை இடமாற்றி விசாரணை செய்வதற்கு (அல்லது விளங்குவதற்கு) சட்டத்துறைத் தலைமையதிபதிக்குத் தத்துவமளிக்கின்ற 1978 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவு வலுவில் இல்லையென்றாற்போன்று பயனுடையதாதல் வேண்டும்.

39. (1) பதினேழாம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய – சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதி

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கெதிரான தவறொன்றுக்காக; அல்லது

(ஆ) அத்தகைய தவறாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமை, அத்தகைய ஒழுங்கு விதியின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில் அல்லது புரிகையில், நேரடியாகவோ மறைமுகமாகவோ, விளைந்திருக்குமிடத்து, அல்லது எழுந்திருக்குமிடத்து, அல்லது செய்யப்பட்டதாகவிருக்குமிடத்து அல்லது செய்யாதுவிடப்பட்டதாகவிருக்கு மிடத்து, வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கெதிரான தவறொன்றுக்காக,

சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியினால் அல்லது அனுமதியுடன் தவிர, நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கெதிரான ஏதேனும் தவறு தொடர்பில் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதலாகாதெனச் சனாதிபதியவர்கள் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம் என்பதுடன்,

அதற்கிணங்க அத்தகைய கட்டளை வலுவில் தொடர்ந்திருக்கும் காலம்வரை அப்பந்தியானது அத்தகைய ஏதேனும் தவறுக்கு ஏற்புடையதாதலுமாகாது.

மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்கள்

40. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது வேறு எழுத்திலான சட்டத்தைப் பொருட்படுத்தாது, அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்கான நீதாய விளக்கம் உட்பட்ட விளக்கமானது, சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான குற்றப்பத்திரத்தின்மேல் நடாத்தப்படலாம் என்பதுடன், அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள், விடயத்துக்கேற்ப, யூரர் சபையில்லாமல், நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னர் பூர்வாங்க விசாரணையொன்றின்றி விளங்கப்படுதலும் வேண்டும்.

ஆயினும், பூர்வாங்க விசாரணையொன்றில் பதியப்பட்ட சாட்சியம் குற்றப்பகர்வொன்றைத் தயாரிக்க அவசியப்படும் என சட்டத்துறை தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, பூர்வாங்க விசாரணையொன்றை நடத்துமாறு பணிக்கலாம். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதன் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய பூர்வாங்க விசாரணைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றப்பகர்வு செய்யப்பட்ட ஆளொருவர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடன் தவிர பிணைக்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(3) (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்கு விதியின் கீழான ஏதேனும் விளக்கத்தில் நீதிமன்றம் அல்லது அதன் தலைமை தாங்கும் நீதிபதி நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட எல்லா ஆட்களையும் ஆணை விட்டழைப்பதற்கு, கைது செய்வதற்கு, கட்டுக்காவலில் வைப்பதற்கு அல்லது பிணையில் விடுவிப்பதற்கு பணிப்புரைகள் வழங்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மேல் நீதிமன்றத்தில் எவரேனும் ஆளுடைய விளக்கமானது, அத்தகைய ஆள் கைது செய்யப்படுவதை தட்டிக் கழிக்கின்றார் அல்லது தலைமறைவாயிருக்கின்றார் அல்லது நோயுற்றிருப்பதாக பாசாங்கு செய்கின்றார் என நீதிமன்றம் திருப்தியுற்றால், அத்தகைய ஆள் இல்லாமலேயே தொடங்கலாம் அல்லது தொடர்ந்து நடைபெறலாம்.

(5) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றப்பகர்வு செய்யப்பட்ட ஆளெவரும் அத்தகைய விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்கு மேற்படாத ஏதேனும் நேரத்தில் வழக்குத் தொடுநரினால் அழைக்க உத்தேசிக்கப்படுகின்ற சாட்சிக்காரர்களால் செய்யப்பட்ட கூற்றுக்களினதும் விளக்கத்தில் தங்கியிருக்கும் ஆவணங்களினதும் பிரதிகள் தமக்குக் கொடுத்துதவப்படவேண்டும் என வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன் அத்தகைய எல்லா கூற்றுக்களினதும் அல்லது ஆவணங்களினதும் பிரதிகள் அல்லது நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய கூற்றுக்களின் அல்லது ஆவணங்களின் பிரதிகள் மட்டும் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் பணிக்கலாம்

(6) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள விளக்கமொன்று கூடியவரை விரைவாகவும் விடயத்திற்கேற்ப மேல் நீதிமன்றத்தின் அல்லது நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள வேறு விளக்கங்களுக்கு எழுத்திலான வேறேதும் சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் நடைபெறுதல் வேண்டும்.

சாட்சியத்தில் கூற்று ஏல்தகவாதல்

41. (1) அவசரகால ஒழுங்குவிதியொன்றின் கீழ் தவறொன்றுக்கு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்று அது குற்ற ஒப்புதலாக அமைந்தாலுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி, அத்துடன் கூற்று செய்யப்பட்ட நேரத்தில் அத்தகைய ஆள் பொலிசு அலுவலர் ஒருவரின் கட்டுக்காவலிலிருப்பினுஞ் சரி அல்லாவிடினுஞ்சரி அத்தகைய கூற்று நீதிவான் ஒருவரின் நேர் முன்னிலையில் செய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அத்தகைய கூற்று சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் இயைபற்றதாக இல்லாதிருந்தால் மட்டுமே அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூற்று உதவிப் பொலிசு அத்தியட்சகரின் பதவி வரிசைக்குக் குறைவான பொலிசு அலுவலர் ஒருவரின் முன்னிலையில் செய்யப்பட்டிருப்பின் அத்தகைய கூற்று எதுவும் அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றின் விடயத்தில் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அவருக்கெதிரானதாக (1) ஆம் பந்தியின் கீழ் எண்பிக்கப்படக்கூடிய கூற்றொன்று, இவ்வொழுங்குவிதிகளின் 31 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் செய்யப்பட்ட கூற்றொன்றைத் தவிர அத்தகைய கூற்று சாட்சியத்தினால் முக்கியமான விவரங்களில் ஒப்புறுதி செய்யப்பட்டால் மட்டுமே அத்தகைய தவறுக்கு கூட்டாக குற்றஞ்சாட்டப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்.

(3) முதலாம் அல்லது (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்று எதுவும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் இயைபற்றது என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அது இயைபற்றது என உறுதிப்படுத்தும் ஆளைச் சார்ந்ததாதல் வேண்டும்.

(4) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம், 26 ஆம், 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறின் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(5) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 110 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்றொன்று (1) ஆம் அல்லது (2) பந்தியின் கீழ் எண்பிக்கப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக மாட்டாது

42. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XI இன் ஏற்பாடுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் நடத்தப்படும் எவையேனும் புலனாய்வுகளுக்கு ஏற்புடையதாதலாகாது.

அரசாங்கப் பகுப்பாய்வாளரின் சான்றிதழும் ஏதேனும் பொருள் அல்லது பண்டம் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் அழிக்கப்படுதலும்

43. (1) தவறொன்றுக்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் பரிசோதனைக்கென அல்லது பகுப்பாய்வுக்கென தமக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளின் அல்லது பண்டத்தின் அடையாளம், அமைப்பு அல்லது குணாதிசயம் தொடர்பில் அரசாங்கப் பகுப்பாய்வாளரின், பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அல்லது அத்தகைய தன்மையில் செயற்படும் வேறு எவரேனும் அலுவலரின் கைப்பட்டதாகக் கருதப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய ஆள் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்குமாறு அழைக்கப்படாமல் அத்தகைய சான்றிதழில் அடங்கியுள்ள கூற்றுக்களின் உண்மைக்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(2) அரசாங்கப் பகுப்பாய்வாளர், பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளர், அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அத்தகைய தன்மையில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலர் அத்தகைய தவறு தொடர்பில் பரிசீலனைக்கென அல்லது பகுப்பாய்வுக்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது பண்டத்தை அவரது கட்டுக்காப்பில் வைப்பது பாதுகாப்பற்றது அல்லது செயல்முறைச் சாத்தியமற்றது என அபிப்பிராயப்படின் அத்தகைய அலுவலர் அவசியமான பரிசோதனையை அல்லது பகுப்பாய்வைச் செய்தபின்னர் அத்தகைய பொருளை அல்லது பண்டத்தை கையுதிர்க்க அல்லது அழிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் விடயம் அல்லது கருமம் (2) ஆம் பந்தியின் கீழ் கையுதிர்க்கப்படுமிடத்து அல்லது கையுதிர்க்கப்பட்ட, கையாளப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட விடயம் அல்லது கருமத்தின் பதிவொன்று விடயத்திற்கேற்றவாறு அரசாங்கப் பகுப்பாய்வாளரினால், பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளரினால், உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் அல்லது அத்தகைய பதவியில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலரினால் பேணப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவேட்டின் பொருள் அல்லது உள்ளீட்டைக் கொண்டுள்ள அத்தகைய எவரேனும் அலுவலரின் கைப்பட கொள்ளப்படும் சான்றிதழ் ஒன்று இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தவறொன்றுக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், அத்தகைய அலுவலர் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் அழைக்கப்படாமல் அத்தகைய சான்றிதழில் அடங்கியுள்ள கூற்றின் உண்மைக்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும்

(4) இந்த ஒழுங்குவிதியில் "தவறு" என்பது ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் VI இன் அல்லது அத்தியாயம் VII இன் அல்லது அத்தியாயம் VIII இன் கீழான ஏதேனும் தவறு என்று பொருள்படும்.

## பாகம் VII

## நானாவிதம்

நானாவித தத்துவங்கள்

44. (1) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் போது சார்ஜன்ட் ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர், கோப்றல் ஒருவரின் தரத்திற்கு குறையாத தரத்தில் உள்ள

இலங்கைத் தரைப்படையின் எவரேனும் உறுப்பினர், தலைமைக் கடலோடி ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள இலங்கைக் கடற்படையின் எவரேனும் உறுப்பினர், அல்லது கோப்றல் ஒருவரின் தரத்திற்குக் குறையாத தரத்தில் உள்ள இலங்கை விமானப் படையின் எவரேனும் உறுப்பினர், ஏதேனும் பொது வீதியில், புகையிரதப் பாதையில், பொது பூங்காவில், பொது பொழுதுபோக்கு இடத்தில் அல்லது வேறு பொது இடத்தில், கடற்கரையில், அல்லது ஏதேனும் பொதுக் கட்டிட அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அதற்கு அண்மையில் அல்லது அதன் சுற்றாடலில் இருந்து எவரேனும் ஆளை அல்லது ஆட்களை அகன்று செல்லுமாறு கட்டளை இடலாம் என்பதுடன் விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆள் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) கட்டளையொன்றை வழங்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் (1) ஆம் பந்தியின் கீழ் கட்டளையொன்று வழங்கப்படுவதன் மீது ஆள் எவரும் அக்கட்டளையுடன் இணங்கியொழுகாவிடின் அல்லது அவசியமாகவிருக்கக்கூடியவாறு அத்தகைய உதவியுடன் அத்தகைய அலுவலர் அக்கட்டளையுடன் இணங்கியொழுகாத தீர்மானத்தை காட்டுவதான அத்தகைய முறையில் நடந்துகொள்வாராயின், ஆயுதம் தாங்கிய படைகள் உள்ளடங்கலாக பலவந்தம் மூலம் அத்தகைய கட்டளைக்கு பயனளிப்பதற்கு முனையலாம் என்பதுடன் அத்தகைய ஆளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவிப்பதற்கு அல்லது கைது செய்வதற்கு, தடுத்து வைப்பதற்கும் செய்விக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 360(1), (2) மற்றும் (4) என்பன ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளிற்கு அல்லது எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

கேள்விக்கு மறுமொழி யளிக்கும் கடமை

45. (1) ஏதேனும் வேறு சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஆள் ஒருவர் எவரேனும் பொலிஸ் அலுவலரால் அல்லது தரைப்படை ஏவுநரால், அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பிற அலுவலரால் கடற்படை ஏவுநரால் அல்லது விமானப் படை ஏவுநரால் அத்தகைய கட்டுக்காப்பு மற்றும் தடுத்துவைத்தல் காலத்தின்போது கேள்விக்கு உட்படுத்தப்படலாம் என்பதுடன் அவருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட கேள்விக்கு மறுமொழியளித்தல் அவ்வாறு கேள்விக்கு உட்படுத்தப்பட்ட ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட, தடுத்துவைக்கப்பட்ட ஆள் எவரும் விசாரணைக்கு உட்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய விசாரணையுடன் தொடர்புபட்ட ஏதேனும் வேறு நோக்கத்திற்காக (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அலுவலர், அத்தகைய ஆளை தடுத்து வைத்த அல்லது கட்டுக்காத்த ஏதேனும் இடத்தில் இருந்து அகற்றலாம் என்பதுடன் அவரை ஒரு தடவையாக ஏழு நாட்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய அலுவலரின் தற்காலிக கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்.

தகவலை பெறுவதற்கான அல்லது உறுப்புரையை பரிசோதிப்பதற் கான தத்துவம்

46. (1) இவ்வொழுங்குவிதிகளில் அடங்கியுள்ள ஏதேனும் விசேட ஏற்பாடுகளுக்குப் பங்கம் இன்றி ஆளெவரும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதென வேண்டப்படுவதன்மேல், தேசிய பாதுகாப்பு நலன்களில் அல்லது பொது ஒழுங்கமைதியைப் பேணுவதற்கு, அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்கு, பெறுவது அல்லது பரிசோதிப்பது அவசியமானதென அல்லது உசிதமானதென அதிகாரி அல்லது அவ்வேண்டுகோளை விடுத்த ஆள் அபிப்பிராயப்படுகின்ற தகவல் அல்லது பொருளாகவுள்ள விடயத்திற்கு ஏற்றவாறு அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அவரது உடைமையிலுள்ள ஏதேனும் அத்தகைய தகவல் அல்லது பொருள் வேண்டுகோளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளிற்கு தகவலை அல்லது பொருளை கொடுத்துதவுதல் அல்லது முன்வைத்தல் வேண்டும் என்பதுடன் ஆள் எவரும் இவ்வொழுங்குவிதியின் கீழ் அவருக்கு முறையாக செய்யப்பட்ட வேண்டுகோளைப் பின்பற்றி அவருடைய உடைமையில் ஏதேனும் தகவலை அல்லது பொருளை கொடுத்து உதவுவதற்கு அல்லது முன்வைப்பதற்கு தவறியிருப்பின், அவர் தவறொன்றின் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியில் “பொருள்” என்பது ஏதேனும் புத்தகம், கணக்குப் புத்தகம் அல்லது ஆவணம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மோட்டார் வாகனச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகளிலிருந்து, ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினர்களுக்கு விலக்களித்தல்

47. பொது ஒழுங்குவிதிகளைப் பேணிக்காக்கும் நோக்கத்திற்காக தகுதி வாய்ந்த அதிகாரியினால் அவ்வாறு செய்யுமாறு அதிகாரமளிக்கப்படும் போது இலங்கை தரைப்படை, இலங்கை கடற்படை, அல்லது இலங்கை விமானப் படையின் உறுப்பினர் ஒருவர் ஏதேனும் மோட்டார் வாகனத்தைச் செலுத்துகையில், 1955 ஆம் ஆண்டு யூலை 8 ஆந் திகதிய 10,815 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (மாட்சிமை தங்கிய மகாராணியாரின் படைகளுக்கு விலக்களித்தல்) 1955 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை “அ” வில் குறித்துரைத்தவாறானதும் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அத்தகைய ஏற்பாடுகளில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைப்பு அலுவலரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள்

48. (1) சனாதிபதியானவர் கட்டளை மூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பிற்காக ஒருங்கிணைப்பு அலுவலராக இருப்பதற்கு எவரேனும் ஆளைப் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(2) ஒருங்கிணைப்பு அலுவலர், இலங்கையில் ஏதேனும் இடப்பரப்பிற்கான கட்டளை மூலம் சனாதிபதியினால் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அல்லது வேறு விதமாக மாவட்ட செயலாளர் ஒருவர் மீது அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அல்லது தொழிற்பாடுகளையும் அவ்விடப் பரப்பில் பிரயோகித்தல், புரிதல், நிறைவேற்றுதலும் வேண்டும். என்பதுடன் குறிப்பீடு ஒவ்வொன்றும் அந்நோக்கத்திற்காக அவ்விடப்பரப்பின் விடயத்திலான ஏற்புடைமையில், அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கான குறிப்பீடு ஒன்றாக பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதியானவர் கட்டளைமூலம், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் இடப்பரப்பிற்காக (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மீது மேற்பார்வையை பிரயோகிப்பதற்கு பிரதம ஒருங்கிணைப்பாளராக இருப்பதற்கு எவரேனும் ஆளை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பிரதான ஒருங்கிணைப்பாளர்களின் கடமைகளைப் புரிவதற்கு அவருக்குத் துணைபுரிவதற்கென அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்களைச் சனாதிபதி பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(5) பிரதான ஒருங்கிணைப்பாளர், (4) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர் இவ்வொழுங்கு விதிகளின்கீழ் அத்தகைய பிரதான ஒருங்கிணைப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம்.

(6) மூன்றாம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் எவரேனும் பிரதம ஒருங்கிணைப்பாளர் பிரதான ஒருங்கிணைப்பாளர், அல்லது (4) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அல்லது பிரதான ஒருங்கிணைப்பாளரின் தத்துவங்களினை (5) ஆம் பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ளவருமான எவரேனும் பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்.

(அ) அவர்மீது மேற்பார்வை செலுத்துகின்றவராய் இவ்வொழுங்குவிதியினால் எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்; அத்துடன்

(ஆ) அவர் மீது மேற்பார்வை செலுத்துகின்ற எவரேனும் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு, இவ்வொழுங்குவிதியினால் அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமை அல்லது பணி, அத்தகைய ஒருங்கிணைப்பு அலுவலரினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் பற்றி விசேடமான அல்லது பொதுவான பணிப்புக்களை விடுக்கலாம்

வழக்குக்கான பாதுகாப்பு

49. சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான சம்மதத்தினால் அல்லது எழுத்திலான சம்மதத்துடன் தவிர ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் அல்லது விடுக்கப்படும் ஏதேனும் கட்டளையின் கீழ் அல்லது பணிப்பின்கீழ், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பில் வழக்கு அல்லது வேறு சட்டப்படியான வழக்கு நடவடிக்கை எதுவும் குடியியலானதாயினுஞ்சரி அல்லது குற்றவியலானதாயினுஞ்சரி ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதலாகாது.

EOG 11-0289

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.